I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No. 145/2022   நாள் : 30.01.2026   வா.சா.1– திரு.அய்யரப்பன்.</u>

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

எனக்கோ, என் மகனுக்கோ கல்குவாரி எதுவுமில்லை. நான் பல தொழில்கள் செய்து வருவதால் என் மாத வருமானம் சொல்லமுடியுமா என்றால் நான் விவசாயம்தான் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். அதனால் எனக்கு மாதம் ரூபாய் 50 ஆயிரம் வரும். 2020 – 2022 காலகட்டத்தில் என் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றும், எவ்வளவு இடம் வாங்கி விற்றேன் என்றும், எவ்வளவு வருமானம் வந்தது என்றும் காட்ட ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை விற்பதற்காக பிரதிவாதி என்னை 21.05.2022 ல் அணுகினார். தாவா சொத்தை கிரையம் கொடுப்பதாக சொன்னார். நான் ஒப்புக் கொண்டேன். வா.சா.ஆ 1 க்கான முத்திரைத்தாள் பிரதிவாதிதான் என் ஆதார் அட்டையை வாங்கிச் சென்று வாங்கி வந்தார். 21.05.2022 ல் முத்திரைத்தாளை வாங்கிக் கொண்டு வந்தார். வா.சா.ஆ 1 ன் முத்திரைத்தாளில் விற்பனை செய்த தேதி 07.08.2021 தேதியிடப்பட்டுள்ளது. நான் ஆதார் அட்டை கொடுத்தபிறகுதான் பிரதிவாதி முத்திரைத்தாள் வாங்கச் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 பதிவு செய்யப்படாத ஒப்பந்தம். பிரதிவாதி என் உறவினர் என்பதால் அவரை நம்பி பதிவு செய்யாமல் இருந்தேன். ஒரு கிரைய ஒப்பந்தம் என்றால் அதை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத ஒப்பந்தம் சட்டப்படி செல்லுமா என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கான விலையை நானும், பிரதிவாதியும் சேர்ந்து முடிவு செய்தோம். தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பு குறித்து பதிவாளர் அலுவலகத்தில் பார்க்கவில்லை. பிரதிவாதி தன் அசல் பத்திரத்தை என்னிடம்

ஒப்படைத்துள்ளார். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3.79 ஏக்கர். தாவா சொத்திற்கான பட்டாவை என்னிடம் பிரதிவாதி ஒப்படைத்துள்ளார். தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வில்லங்கச் சான்றிதழை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று பலமுறை கேட்டும் சாட்சி பதில் அளிக்காமல் மௌனமாக இருக்கிறார். தாவா சொத்துக்களில் மால்கள் தெரியாது. தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் சரியாக உள்ளதா என்று நான் அளந்து பார்க்கவில்லை. பொதுவாக ஒரு சொத்தை அளந்து பார்த்து சரியாக உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்த பிறகுதான் ஒப்பந்தம் எழுதுவார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையில் வா.சா.ஆ1 ஒப்பந்தத்தை எழுதிக் கொடுக்கவில்லை என்பதால்தான் மேற்படி காரியங்களை நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. மொத்த கிரையத் தொகையான ரூ.25 லட்சத்தையும் நான் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன். மொத்த கிரையத் தொகையையும் நான் கொடுத்துவிட்டதால் சொத்தை என்னிடம் கொடுக்கும்படி கேட்டேன். கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு சொத்தை என்னிடம் கொடுப்பதாக சொன்னார். சாட்சியிடம் வா.சா.ஆ1 ஒப்பந்தத்தைக் காட்டி அதில் மூலபத்திரங்களின் எண்கள் சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு சாட்சி எனக்கு சரியாக படிக்கத் தெரியாது என்று கூறுகிறார். வா.சா.ஆ1ல் பிரதிவாதியின் கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது. வா.சா.ஆ 4 முதல் 6 பத்திரங்களில் பிரதிவாதிகளின் கையொப்பங்கள் தமிழில் உள்ளது. கையொப்பங்களில் மொழி வித்தியாசம் குறித்து நான் பிரதிவாதியிடம் கேட்கவில்லை. மொழி வித்தியாசம் குறித்து நான் வழக்குரையிலும் சொல்லவில்லை. என் மகன் பெட்ரோல் நிலையம் வைத்துள்ளார். பிரதிவாதி இரண்டு லாரிகள் மற்றும்

ஆட்டோ வைத்துள்ளார். மேற்படி வாகனங்களுக்கு டீசல் போடும்போது பில்லில் பிரதிவாதி ஆங்கிலத்தில்தான் கையொப்பமிடுவார். அந்த பில்லை வா.சா.ஆ1ல் உள்ள கையொப்பத்துடன் ஒப்பீடு செய்வதற்கு என்னால் தாக்கல் செய்ய முடியும். மொத்த தொகையும் கொடுத்த பிறகு அன்றே ஏன் கிரைய பத்திரம் எழுதிக் கொள்ளவில்லை என்றால் நல்ல நாள் பார்த்து எழுதிக் கொடுப்பதாக சொன்னார். வா.சா.ஆ1ல் நல்ல நாள் பார்த்து கிரையம் எழுதிக் கொடுப்பதாக வாசகமில்லை. வா.சா.ஆ1ல் 2வது பக்கத்தில் 7வது வரியில் "இதன் மூலம் நான் உங்களுக்கு கிரையமாக எழுதிக் கொடுத்து விடுகிறேன்" என்று வாசகம் எழுதப்பட்டுள்ளது. அந்த வாசகத்திற்கான அர்த்தம் கிரையமா அல்லது ஒப்பந்தமா என்று கேட்டதற்கு சாட்சி பதில் அளிக்காமல் மௌனமாக இருக்கிறார். பிரதிவாதி என்னிடம் மூன்று பத்திரங்களை கொடுத்துள்ளார். ஆனால் வா.சா.ஆ1ல் இரண்டு பத்திரங்கள் மட்டும்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. நான் வருமானவரி கட்டுவதில்லை. 21.05.2022ல் என்னிடம் ரூபாய் 25 லட்சம் இருந்ததாக காட்ட ஆவணம் உள்ளதா என்றால் அந்த தொகையை சிறுக சிறுக சேர்த்து வைத்திருந்தேன். முத்திரைத்தாள் வாங்கிய தேதியிலிருந்து எட்டு மாதங்கள் கழித்துதான் வா.சா.ஆ1 எழுதப்பட்டுள்ளது என்றால் முத்திரைத்தாளை 21.05.2022ல்தான் வாங்கினேன். வா.சா.ஆ1 தேதியில் பிரதிவாதியால் பதிவாளர் அலுவலகத்திற்கு வரமுடியவில்லை என்பதால் வா.சா.ஆ1–ஐ பதிவு செய்ய முடியவில்லை என்று வா.சா.ஆ2 சட்ட அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன். நான் பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தேன். கிரையபத்திரம் தயார் செய்யவில்லை. 09.06.2022ல் பதிவாளர் அலுவலகம் சென்றேன். அதுகுறித்து பிரதிவாதிக்கு முன்பே தகவல் சொன்னேன். 08.06.2022 அன்று மாலையில் பிரதிவாதியை

நேரில் சந்தித்து சொன்னேன். 09.06.2022 க்கு முந்தைய நாள் வில்லங்கம் போட்டுப் பார்த்தேன். வா.சா.ஆ1 தேதிக்கு முன்பாக வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. வா.சா.ஆ1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல. என் மகனும், பிரதிவாதியும் எவ்வளவு நாட்கள் தொழில் செய்து வந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. ரூபாய் 25 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எனக்கோ, என் மகனுக்கோ கல்குவாரி தொழில் இருந்ததில்லை. பிரதிவாதிக்கு கல்குவாரி தொழில் இருந்ததா என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையது அல்ல என்பதால் கிரையம் எழுதிக் கொடுக்கும் கடமை பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் என் மகனுக்கும் எந்த விதத்தில் சம்பந்தம் இருந்தது என்பதை காட்ட என் மகனை சாட்சியாக காட்ட தயாராக இருக்கிறேன். என் மகனும், பிரதிவாதியும் கல்குவாரி தொழில் செய்தார்கள் என்றும், அப்போது பிரதிவாதி அலுவலகத்தில் வைத்திருந்த அசல் ஆவணங்களை என் மகனிடமிருந்து நான் பெற்று வா.சா.ஆ1–ஐ போலியாக தயாரித்து பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.30 18:23:21 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.